**சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்: திரு.ப.மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப.,**

**நாள்.17.09.2022**

**ந.க.எண்.2136/2022/டி2**

பொருள்: பணியாளர் குழு – பேரூராட்சிகள் நிர்வாகம் – சிவகங்கை மண்டலம் – சிவகங்கை மாவட்டப் பேரூராட்சிகளில் கீழ்நிலை பணியிடங்களான பதிவறை எழுத்தர், துப்புரவு மேற்பார்வையாளர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களில் பணிபுரிந்து வந்தவர்களுக்கு 20% சதவீத ஒதுக்கீடு அடிப்படையில் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடங்களில் பணி மாறுதல் மூலம் பதவி உயர்வு அளிக்கப்பட்டது – பணியில் இணைந்து ஓராண்டு நிறைவு செய்தது – இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியில் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1) அரசாணை (3ப) எண்.04, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை, நாள். 11.02.2021.
2) சென்னை,பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.4960/2020/அ2, நாள். 09.03.2021.
3) சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 1327 / 2020 / டி2, நாள். 25.05.2021.
4) புதுவயல் பேரூராட்சி செயல் அலுவலரின் கருத்துரு ந.க.எண். 286/2021/அ2, நாள். 08.07.2022.
5) கண்டனூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கருத்துரு ந.க.எண்.200/2021, நாள். 18.07.2022.
6) தொடர்புடைய ஆவணங்கள்.

*****

**ஆணை:**

சிவகங்கை மண்டலம், சிவகங்கை மாவட்ட பேரூராட்சிகளில் கீழ்நிலை பணியிடங்களான பதிவறை எழுத்தர், துப்புரவு மேற்பார்வையாளர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களில் பணிபுரிந்து 20% சதவீத ஒதுக்கீடு அடிப்படையில் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடங்களில் பணி மாறுதல் மூலம் பதவி உயர்வு அளிக்கப்பட்டு பணிபுரிந்து வரும் பணியாளர்கள், பணியில் இணைந்து ஓராண்டு நிறைவு செய்ததை தொடர்ந்து, அவர்கள் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியில் இணைந்த நாள் முதல் கீழ்காணும் அட்டவணை கலம் (4)ல் குறிப்பிட்டுள்ள தேதிகளில் பணியினை வரன்முறை (Service Regularization) செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் மற்றும் பணிபுரியும் பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திரு.ஆர். ரவி,<br>இளநிலை உதவியாளர்,<br>கண்டனூர் பேரூராட்சி. | 28.05.2021<br>முற்பகல் | 28.05.2021<br>முற்பகல் |
| 2. | திரு.வே. ஜெயசீலன்,<br>வரித்தண்டலர்,<br>புதுவயல் பேரூராட்சி. | 27.05.2021<br>முற்பகல் | 27.05.2021<br>முற்பகல் |

17/9/22

மாவட்ட ஆட்சியருக்காக,
சிவகங்கை.

17/9/2022

17/9/22

பெறுநர்
சம்மந்தப்பட்டவர்கள் (செயல் அலுவலர் மூலமாக)

நகல்: செயல் அலுவலர், கண்டனூர் / புதுவயல் பேரூராட்சி, சிவகங்கை மாவட்டம்.

Scanned with CamScanner